FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318721

1. District : மாவட்டம் தேனி — PS: மேற்கு காவல்நிலையம் (தனிப்படை புலன் விசாரணை பிரிவு) — Year ஆண்டு 2026 — FIR No. முத.அ. எண் 02/2026 — Date நாள் 04.7.2026

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 7 (a)

(ii) Act சட்டம்: The Prevention of Corruption Act — Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: 1988, as Amended in 2018 — Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 03.7.2026 — Date from நாள் முதல் 16.00 மணி இன் — Date to : நாள் வரை 04.07.2026 03.00 மணி வரை

Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.07.2026 — Time : நேரம் 16.30 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.07.2026 — Time : நேரம் 17.00 மணி

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 26 K.m. மேற்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி நகராட்சி அலுவலகம், போடி நாயக்கனூர், தேனி மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கே.ரா. ஜெகதீஸ்வரன் — (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் நாகசுந்தரம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 48 yrs — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் அரசு ஊழியர் — (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. S. முத்துபா, நகராட்சி ஆணையாளர், நகராட்சி அலுவலகம், போடி நாயக்கனூர். 2. M. விஜய் ஆனந்த்/ கணினி உதவியாளர் 3. S. கார்மேகம்/ கணினி உதவியாளர்/ கணினி 4. E. பாண்டி, உதவியாளர் அலுவலகம் மற்றும் நிர்வாக அலுவலர் (பொறுப்பு), நகராட்சி அலுவலகம், போடி நாயக்கனூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

தனி தாளில் இணைக்கப்பட்டுள்ளது

/

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

T.R.C. 04.7.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.07.2026.

T. Ramesh
Name பெயர் .....
Rank நிலை ..... No எண்
Inspector of Police
VAC, Theni District

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.02/2026, சட்டபிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு , காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 04.07.2026ம் தேதி மாலை 16.30 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு. இரா.ஸ்ரீதரபாண்டியன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணிணி தட்டச்சு செய்த புகாரை பெற்று 04.07.2026ம் தேதி மாலை 17.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் இரா.ஸ்ரீதரபாண்டியன், வயது 48/2026, த/பெ. ராமச்சந்திரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை, பெறுநர்: காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, தேனி மாவட்டம். ந.க.எண். 25/2026/ஐ2 நாள்: 04.07.2026, நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 03.07.2026ம் தேதி தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் வீட்டுவரி, பிறப்பு, இறப்பு சான்றிதழ், குழாய் வரி, பாதாளசாக்கடை வரி போன்றவற்றக்காக அலுவலகம் வரும் பொதுமக்களிடம் அரசு நிர்ணயித்த தொகைக்கு அதிகமாக முறைகேடாக பணம் வசூல் செய்வதாகவும், UPI Transactions மூலம் லஞ்மாக பணம் கேட்டு பெறுவதாகவும் கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் பேரில் நேற்று 03.07.2026 ம் தேதி மாலை சுமார் 15.00 மணிக்கு தேனி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து தகவலின் பேரில் வந்து நானும், காவல் ஆய்வாளர் திருமதி.T.ராமேஸ்வரி மற்றும் பார்ட்டி சகிதம் தீடீர் சோதனை செய்வதற்காக அரசு வாகனம் TN 22 G 1027 பொலிரோ வாகனத்தில் போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்திற்கு புறப்பட்டு மாலைசுமார் 16.00 மணிக்கு சென்று அடைந்தோம். மேற்படி அலுவலகம் போடிநாயக்கனூர் கட்டபொம்மன் சிலை ரவுண்டானாவில் இருந்து வலதுபக்கம் திரும்ப காமராஜர் பாண்டியன் ரோட்டில் வலதுபக்கம் அமைந்துள்ளது. இந்த நகராட்சி அலுவலகம் அரசு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த கட்டிடத்தில் தரைத்தளம் மற்றும் இரண்டு மேல்தளங்கள் உள்ளன. இந்த அலுவலகத்தின் நுழைவு வாயில்கள் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி நுழைவு வாயிலில் நுழைந்தவுடன் போர்ட்டிகோவை தாண்டி அலுவலக கட்டிடத்தின் பிரதான நுழைவுவாயில் உள்ளது. முதலில் அலுவலகத்தின் பெரியஹால் 24 x 21.4 என்ற அளவில் அமைந்துள்ளது. அந்த ஹாலின் இடது ஓரத்தில் ஒருடேபிள், சேர் போடப்பட்டு அதில் பார்வையாளர் பதிவேட்டுடன் திருமதி.கவிதா என்ற பெண் பணியாளர் அமர்ந்திருந்தார். அந்த டேபிளில் ஒரு புகார் பெட்டி வைக்கப்பட்டு, அந்த இருக்கையின் பின்புறம் ஆர்.ஓ. குடிநீர் பொருத்தப்பட்டுள்ளது. திருமதி.கவிதா அவர்களிடம்

கேட்டுதெரிந்த பின் தரைதளத்தில் வலதுபுறடத்தில் கடைசி அறையில் இருந்த நகராட்சி ஆணையர் திரு.எஸ்.முஸ்தபா அவர்களை சந்தித்தபோது அவர் அலுவலர்களுடன் அவர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக செயற்பொறியாளர் மதுரை அவர்களின் வீடியோகான்பரன்ஸ் மீட்டிங்கில் இருந்தார். அவரிடம் ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.ரா.ஸ்ரீதரபாண்டியன் மற்றும் ஆய்வாளர் திருமதி.தி.ராமேஸ்வரி ஆகிய நான் எங்களையும், குழுவினரையும் அறிமுகப்படுத்தி இந்த அலுவலகத்தைதிடீர் கூட்டாய்வு செய்யவந்த விவரம் தெரிவித்து ஒத்துழைப்பு தரதெரிவிக்கப்பட்டது. அதன்படி அலுவலகத்தில் இருந்த காலம் 5,6ல் கண்ட அரசு நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரையும் தரைதளத்தில் வரவைத்து அவர்களின் கைப்பேசியைபெற்றும், அதனைத்தொடர்ந்து ஹாலில் இருந்து உள்ளே நுழையும் போதுவலதுபுறத்தில் கிழக்குநோக்கி இருந்த முதல் மேனேஜர் அறைஎண்.103-ல் பெண் நபர்களையும், ஆண்நபர்களை நுழைவுவாயிலின் உள்புறம் எதிரே அமைந்திருந்த மேற்கு நோக்கிய அறைஎண்.107 கணினி அறையிலும் தனித்தனியே குழுவினரால் சோதனையிடப்பட்டனர். சோதனையின்போது மேற்கண்ட நபர்களிடம் இருந்த பணவிவரம் பின்கண்டவாறு இருந்ததை விசாரித்த போது அனைவரும் தங்களிடம் இருந்த பணம் தங்களது சொந்த செலவுக்காக வீட்டிலிருந்து கொண்டுவந்தது என்றும் அதை தெரிவித்ததற்கான உரியமுகாந்திரம் சோதனையின் போது இருந்ததால் அவர்களின் சொந்தப்பணத்தை விசாரணைக்குப்பின் ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களின் முன் எழுத்து மூலமான விளக்கம் பெற்று திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. அனைவரின் செல்போன்கள் சோதனை செய்யப்பட்டு G-pay Transaction விவரம் குறித்து அறியப்பட்டது. அலுவலக நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்கள் யாரும் தங்களிடமிருந்த பணவிவரம் குறித்து அலுவலக தனிநபர் ரொக்க இருப்புபதிவேட்டில் குறிப்புகள் ஏதும் எழுதவில்லை என தெரிவித்தனர். இதனை பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில் அவ்வாறே பதிவுகள் செய்யப்படவில்லை.

போடிநாயக்கனூர் நிரந்தர அலுவலகப்பணியாளர்கள்

வ. எண்	ஆய்வின் போது இருந்த பணியாளர்களின் பெயர்	பணியின் பெயர்	ஆய்வின் போது கையிலிருந்த தொகை
1.	திரு.முஸ்தபா,	ஆணையாளர்	230
2.	திருமதி.வாசுகி	உதவி வருவாய் அலுவலர், (மேனேஜர் பொறுப்பு)	760
3.	திரு.அரசகுமார்	சுகாதார அலுவலர்	190
4.	திருமதி.பி.வனிதை	இளநிலை பொறியாளர்	175
5.	திருமதி.அமுதா	வரைவாளர்	290
6.	திரு.மா.சுகதேவ்	நகரமைப்பு ஆய்வாளர்	460

7.	திருமதி.ஜானக தேவ செல்வி	உதவி கணினி திட்ட அமைப்பாளர்	280
8.	திருமதி.அங்கு பாக்யலட்சுமி	சி1 உதவியாளர்	20
9.	திரு.அருண்குமார்	பி3 உதவியாளர்	100
10.	திரு.காஜா நஜ்முதீன்	வருவாய் ஆய்வாளர்	1070
11.	திருமதி.மணிமேகலா	இளநிலை உதவியாளர்	300
12.	திரு.கருப்பசாமி	வருவாய் உதவியாளர்	710
13.	திரு.ராஜா	இளநிலை உதவியாளர்	700
14.	திரு.மு.விஜய்	இளநிலை உதவியாளர்	500
	இவரது செல்போன் சோதனை செய்ததில் 01.06.2026 முதல் 03.07.2026 வரை 9080481266 என்ற எண்ணிற்கு G.Pay மொத்தம் ரூ.1,03,790/- வரப்பெற்றுள்ளது. இது குறித்து விசாரிக்க தான் வரிசெலுத்துவோரிடமிருந்து G.Pay-; தனது கனரா வங்கிகணக்கில் பணம் பெறப்பட்டுபின்னர் தான் அதை பணமாக ஏடிஎம் மூலம் எடுத்து நகராட்சி கணக்கில் உரிய வரிதலைப்பில் பணமாக கட்டி ரசீதை உரியவரிடம் கொடுத்துவிட்டதாக தெரிவித்தார். இது குறித்து வரிசெலுத்தியவர்கள் பெயர் விவரம் கேட்ட போது விஜய் என்பவரால் உரியவிளக்கம் தர இயலவில்லை. இதன் விவரங்கள் செல்போனில் இருந்து ஸ்கேன் செய்யப்பட்டு பிரிண்ட் செய்யப்பட்டு அவரிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுகுறித்து ஆணையர் அவர்களிடம் விசாரிக்க இவ்வாறான முறையில் வரிவசூலிப்பது விதிமுறை மீறலானது என்றும் விஜய் என்பவர் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.		
15.	செல்வி.காமாட்சி கௌசி	இளநிலை உதவியாளர் (காசாளர் சீட்)	
	கனரா வங்கி போடிக்கு அலுவலக பணியாக சென்றிருந்தவர் திடீர் கூட்டாய்வின் போது மேலாளர் தெரிவித்தபடி அலுவலகம் வந்து இன்றைய வரிவசூல் விவரம் தெரிவித்தார்.		
16.	திரு.ராமச்சந்திரன்	வருவாய் உதவியாளர்	840
17.	திருமதி.தேவி	இளநிலை உதவியாளர்	11
18.	திரு.ஜி.ஆனந்தகுமார்	வருவாய் உதவியாளர்	120
19.	திரு.பாலசுப்ரமணியன்	நீர்வடிநிலையம் இயக்குபவர்	2130
	இவரது G-Pay பரிமாற்ற விவரம் சோதனை செய்ததில் இன்று திரு.ரகு ரூ.1300, திரு.தவபாண்டி ரூ.2000, திரு.அரவிந்த்குமார் ரூ.1300, திரு.பிரதீப் ரூ.2340/- ஆகியோரிடமிருந்து பணம் பெறப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கு வரிசெலுத்தியதாக தெரிவித்தார்.அதன் விவரங்கள் குறித்து சோதனையில் விசாரிக்க சரியாக இருந்தது.		
20.	திருமதி.எஸ்.சண்முகபிரியா	அலுவலக உதவியாளர் (பதிவுறு எழுத்தர்)	05
21.	திருமதி.பி.கவிதா	அலுவலக உதவியாளர் (கேஷ் கவுண்டர்)	50
22.	திருமதி.எம்.பரிதாபேகம்	சங்கிலியாள் (அலுவலக உதவியாளர்)	05
23.	திருமதி.என்.சண்டிபிரியா	சங்கிலியாள் (அலுவலக உதவியாளர்)	20

24.	திரு.அ.ராமகிருஷ்ணன்	அலுவலகஉதவியாளர்	-
25.	திருமதி.லட்சுமி	மதகதிறப்பாளர் (அலுவலக உதவியாளர்)	300
26.	திரு.மணிகண்டபிரபு	கணக்கெடுப்பாளர், (தேனி ஆட்சியாளர் அலுவலகத்திலிருந்து அயல்பணி)	240
27.	திரு.எஸ்.ரியாசுதீன்	நகர சார்வு ஆய்வர், நிலஅளவைபிரிவு,	180
	(கள விசாரணை பணியாக சென்றிருந்தவர் சோதனையின் போது நகரமைப்பு ஆய்வாளர் திரு.சுகதேவ் மூலம் தகவல் தெரிவித்ததன் படி பின்னர் அலுவலகம் வந்துவிவரம் தெரிவித்தார்.		
28.	திரு.அன்பழகன்,	பொதுக்குழாய் துப்புரவாளர்,	650
29.	திரு.G.மாரிமுத்து,	ஓட்டுநர்,	110
30.	திரு.கார்த்திகேயன்	தொழில் நுட்ப உதவியாளர்	-

அலுவலகபணியாளர்கள் (ஒருங்கிணைந்த ஊதியம்)

வ.எண்	ஆய்வின் போது இருந்த பணியாளர்களின் பெயர்	பணியின் பெயர்	ஆய்வின் போது கையிலிருந்த தொகை
1.	திரு.பிரசாந்த்	மேற்பார்வையாளர் (SBM)	140
2.	திரு.தமிழ்செல்வன்	பரப்புரையாளர் (SBM)	500
3.	திரு.சக்திவேல்	பரப்புரையாளர் (SBM)	26
4.	திரு.முத்துராமகிருஷ்ணன்	பரப்புரையாளர் (SBM)	-

தற்காலிகஅலுவலகபணியாளர்கள்

வ.எண்	ஆய்வின் போது இருந்த பணியாளர்களின் பெயர்	பணியின் பெயர்	ஆய்வின் போது கையிலிருந்த தொகை
1.	செல்வி.கற்பகபிரியா	DBC Staff (Typist)	300
2.	செல்வி.ரஹமத் நிஷா	DBC Staff (Typist)	300
3.	திரு.பிரதாப்	DBC Staff (Typist)	300
4.	செல்வி.கார்த்திகா	Account Section, Typist	560

வெளி அலுவலக பணியாளர்கள்

வ. எண்	ஆய்வின் போது இருந்த பணியாளர்களின் பெயர்	பணியின் பெயர்	ஆய்வின் போது கையிலிருந்த தொகை
1.	திரு.B.ராம்குமார்	சுகாதார ஆய்வாளர், ஆரம்பசுகாதாரநிலையம், சிலைமரத்துப்பட்டி,	1730

வெளிநபர்கள்

வ. எண்	ஆய்வின் போது இருந்த வெளிநபர்களின் பெயர்	ஆய்வின் போது கையிலிருந்த தொகை
1.	திருமதி.அங்காளாஈஸ்வரி	530
2.	திருமதி.முத்துலட்சுமி	-
3.	திரு.பா.சிவக்குமார்	160
4.	திரு.பாலமுருகன்	1455
5.	திரு.அப்துல் பாரி	-
6.	திரு.ஜெசில் இர்பான்	-

இதன் தொடர்ச்சியாக தரைதளத்தில் உள்ள அறைகள் 101 முதல் 111 வரை, பின் கண்டவாறு சோதனை செய்யப்பட்டது. அறைஎண்.101 நகராட்சி ஆணையர் அறையானது சோதனையிடப்பட்டதில் அவரின் இருக்கை மேஜைடிராயர்கள், செல்ப், ஷோகேஷ் ஸ்டாண்ட், அறையுடன் உள்ள கெஸ்ட்ரூம், கழிவறை பகுதியில் கைப்பற்றக்கூடிய ஆவணங்கள் ஏதும் இல்லை. அலுவகம் தொடர்பான புத்தகங்கள், பைல், ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்த அறையில் அலுவலகம், இவிஎம் பாதுகாப்பு அறையின் சிசிடிவி மானிடர்-2, யூனிட் உள்ளது. அலுவலகத்தில் 32 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு 2 பழுதடைந்துள்ளதாகவும், இவிஎம் அறையில் 13 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு இயக்கத்தில் உள்ளதாகவும் தெரிவித்தார். 102 காசாளர் அறை, 108 கணக்கர் அறை ஆகும். இவை பூட்டப்பட்டுள்ளதால் இதன் சாவிகள் காசாளர் காமாட்சி கௌசி வசம் உள்ளதாகவும், அவர் வந்தபின் சோதனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அறைஎண்.103 மேலாளர் அறையில் பொறுப்பு நிர்வாக அலுவலர் திருமதி.வாசுகி இருந்தார். அவர் இந்த பொறுப்பேற்று 3 நாட்களேஆவதாக கூறினார். அறையில் இருந்த கீபாக்ஸ் இருக்கைகள், மரசெல்ப்கள சோதனை செய்யப்பட்டதில் கைப்பற்றக்கூடிய ஆவணங்கள் ஏதும் இல்லை. தரைதளத்தில் இடதுபுறம் லிப்ட் அருகே பழைய பொருட்கள் வைக்கப்பட்ட ஸ்டோர்ரூமும் அதனையடுத்து, 104 சமுதாய அமைப்பாளர் திருமதி.தவமணிஅறை, அதனையடுத்த பெண், ஆண் கழிவறைகள் சோதனை செய்யப்பட்டது. இதோடு அறைஎண்.106 யுபிஎஸ் அறையும் சோதனை செய்யப்பட்டதில் அலுவலக ஆவணங்கள் விரகைப்பற்றக்கூடிய ஆவணங்கள் ஏதும் இல்லை. 107 கணினி அறையில் கணினி திட்ட அமைப்பாளர் திருமதி.ஜானகி தேவ செல்வி அங்கிருந்த அலமாரி, மரபீரோ, டிராயர் போன்றவற்றின் சாவிகளை எடுத்துக்கொடுக்க அவர் முன்னிலையில் கணினிஅறை, அதனைஒட்டி இருந்த இரண்டு கண்ணாடி அறைகள் சோதனை செய்யப்பட்டது. அந்த அறையில் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. காசாளர் செல்வி. காமாட்சிகௌசி என்பவர் அலுவலகம் வந்தவருடன் திருமதி.சண்டிபிரியா,

(சங்கிலியாளர்) என்பவருடன், உதவி வருவாய் அலுவலர் திருமதி.வாசுகி, ஆணையர் உடன் அறைஎண்.105 வரிவசூல் மையம் சோதனையிடப்பட்டது. 32 x 22 ½ என்ற அளவில் உள்ள (105) வரிவசூல் மையத்தினுள் "ட" வடிவில் அலுமினிய குறுக்கீட்டுடன் வரிவசூல் செய்வதற்கென்று தனியாக 6 கவுண்டருடன் கூடிய அந்த அறையினுள் பொதுமக்கள் அமர்வதற்காக இருக்கைகளும் 3 வரிசையில் போடப்பட்டிருந்தன. அறையின் வலப்புறம் உள்ள 3 கவுண்டர்களில் 2-ல் மட்டும் தனித்தனியே இன்று வரிவசூல் காசாளர் காமாட்சிகவுசி, சண்டிபிரியா, கவிதா, அலுவலக உதவியாளர் ஆகியோர் வரி செலுத்துபவர்களிடம் வரிப்பணம் வசூலித்துள்ளதாகவும், அவை கணினியில் பதியப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். திருமதி.சுருளியம்மாள் இன்று விடுப்பில் உள்ளார் என தெரிவிக்கப்பட்டது. காலை முதல் கவிதா என்பவர் ரூ.30,200/- வரிவசூல் செய்த பின்னர் அதை சண்டிபிரியா அவர்களிடம் ஒப்படைத்து விட்டு பார்வையாளர் வரவேற்பு பகுதிக்கு பணிக்கு சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டது. இந்த வரவேற்பு கவுண்டர் அறையில் கணினிகள்,பணம் எண்ணும் எந்திரங்கள் உள்ளன. காசாளர் காமாட்சிகௌசி இருக்கை மேஜையை சோதனை செய்ததில் இடப்புறம் உள்ள டிராயரில் ரூ.83,170/- இருந்தது. இதற்கான விவரம் கேட்டதில் கணினியில் வரிசை எண்.0002692 முதல் 0002766 வரை மொத்தம் 75 ரசீதுகளில் வரி வசூலிக்கப்பட்டதாக அசல் ரசீதுகளுடன் விவரம் காட்டினார். வரி ரசீதுகளில் உள்ள பண கூட்டுத்தொகை மொத்தம் ரூ.1,26,795/- ஆக இருந்தது. குறைவாக உள்ள பணம் ரூ.43,675/- குறித்து காசாளரிடம் விவரம் கேட்க பில்கலெக்டர் ஆனந்தகுமார் ரூ.13,242/-ம் திரு.அனீஸ் (டிரேட் லைசென்ஸ்) ரூ.2000/-ம் இளநிலை உதவியாளர் முனியசாமி ரூ.500/-ம் பில்கலெக்டர் ராமசந்திரன் ரூ.9357/-ம் எ-2 மற்றும் பில்கலெக்டர் கிளார்க் விஜய் ரூ.9000/-ம், பிரேம்குமார் ரூ.9400/-ம் வரி வசூலிப்பவர்களிடமிருந்து பெற்று இன்று மாலை தருவதாக சொன்னதன் பேரில் தான் வரிப்பணம் பெறாமல் முன்கூட்டியே ரசீது போட்டுக்கொடுத்தாகவும், நாளை முற்பகலுக்குள் இந்த பணத்தை மேற்கண்டவர்களிடமிருந்து பெற்று வசூலான மொத்த தொகையுடன் அலுவலக வங்கிகணக்கில் கனரா வங்கி போடியில் செலுத்திவிடுவதாகவும், இதுபோல் வழக்கமாக தான் பணியாளர்கள் சொல்வது போல் பணம் பெறாமல் முன்கூட்டியே ரசீது போட்டுக்கொடுத்து அதன்படி, நகராட்சி அலுவலக வரிவசூல் டார்கெட்டை உயர்த்துவதற்காக இவ்வாறு செய்வதாகவும் தெரிவித்தார். மேலும் பழைய சில்லறை பணம் ரூ.126/-ம் இதில் அடங்கும் எனவும் தெரிவித்தார்.இவரின் மேஜையின் வலது பக்க டிராயரில் சோதனை செய்தபோது 2 ஐநூறு ரூபாய் கட்டுக்கள் (182x500=Rs.91000) மொத்தம் ரூ.91,000/- இருந்தது. இது குறித்து விவரம் கேட்க காசாளர் எ-2 மற்றும் பில்கலெக்டர் கிளார்க் விஜய் தன்னிடம் மதியம் 02.30 மணிக்கு வங்கி செல்வதற்கு முன்னர் வந்து மேற்சொன்னரூ.91000/- கொடுத்து இது நகராட்சி கடையை லீசுக்கு எடுத்தவர் செலுத்த வேண்டிய டெபாசிட் பணம் என்றும் இதனை வைத்துக்கொள்ளுமாறும் தெரிவித்ததாகவும்,

பணம் கொடுத்தநபரை தன்னுடன் அவர் அழைத்துவரவில்லை என்றும், தான் கேட்டபோது அந்த நபர் பற்றி தெரியாது என்றும் விவரம் சொல்லவில்லை என்றும், பின்னர் அழைத்து வருவதாகவும் மற்ற வரிவசூல் விவரம் தெரிவிப்பதாகவும் கொடுத்துச் சென்றுவிட்டார் என்றும், மறுக்கமுடியாமல் தான் வாங்கி தனது டிராயர் வலப்புறம் தனியாக ஒரு பேப்பரில் வைத்ததாகவும் தெரிவித்தார். இப்பணம் குறித்த வரி செலுத்திய ரசீது விவரம் பற்றி சோதனை செய்தபோது ஏதும் கணினி மற்றும் வேறு எந்த வகையிலும் பதிவு செய்யப்படவில்லை. திரு.விஜய் என்பவரை அழைத்து இது குறித்து விசாரிக்க அவரால் நகராட்சிக்கு சொந்தமான கடைகளை லீசுக்கு எடுத்த நபர் விவரம், பணம் கொடுத்து அனுப்பியநபர் விவரம், பணம் கொண்டு வந்தவர் பெயர் விவரம் தெரிவிக்க இயலவில்லை. சந்தேகப்படும் விதத்தில் முன்னுக்குபின் முரணான தகவல்களை திரு.விஜய் தெரிவித்தார். இதன்விவரம் குறித்து விசாரிக்கையில் அருகிலிருந்த பணியாளர் திருமதி.சண்டிபிரியா, திருமதி.கவிதா, ஆணையர், திருமதி.வாசுகி, உதவி வருவாய் அலுவலர்/பொறுப்பு நிர்வாக அலுவலர் ஆகியோரும் இது குறித்து தங்களுக்கு தெரியாது என்றும், இதுபோல் கணக்கில் வராத பணத்தினை யாரும் பெற்று வரிவசூலிக்கும் மையத்தில் வைத்திருக்க கூடாது என ஏற்கெனவே ஆணையர் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். ரூ.91000/- மேற்சொன்ன பணத்திற்கான சரியான விளக்கம், முகாந்திரம் யாரும் தெரிவிக்காததாலும் வரிவசூலிப்பவர்களிடமிருந்து, இதுகுறித்து எவ்வித அலுவலககுறிப்பும் கணினிகுறிப்பும் இல்லாததாலும் இப்பணத்தை சந்தேகத்திற்கிடமான கணக்கில் வராத பணமாக கருதி ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இப்பணம் குறித்த Denomination விவரம் தனித்தாளில் குறிக்கப்பட்டது. காசாளர் கவுண்டருக்கு அருகிலுள்ள வரிவசூல் கவுண்டரை திருமதி.சண்டிபிரியா பணியாளர் முன்பு சோதனை செய்தபோது மொத்த பணம் ரூ.1,84,500/- இருந்தது. இது குறித்து இன்றைய கணினி வரிவசூல் விவரம் ,ரசீதுகள் (மொத்தம் 167) சோதனைசெய்ததில் ரூ.2,43,893/- பணம் வரிவசூல் செய்யப்பட்டதாக கணக்குகள் உள்ளது. ஆனால் பணம் ரூ.59,393/- குறைவாக உள்ளது குறித்து விவரம் கேட்க திருமதி.சண்டிபிரியா பில்கலெக்டர் ராமச்சந்திரன் ரூ.48428/-ம் விஜய் ரூ.6380/-ம் வாட்டர் சப்ளை ஹெல்ப்பர் சிவன் ரூ.4585/-ம் வரி வசூலிப்பவர்களிடமிருந்து பெற்று இன்று மாலை தருவதாக சொன்னதன் பேரில் வரிப்பணம் பெறாமல் முன்கூட்டியே தான் ரசீது போட்டுக்கொடுத்தாகவும், நாளை முற்பகலுக்குள் இந்த பணத்தை மேற்கண்டவர்களிடமிருந்து பெற்று வசூலான மொத்த தொகையுடன் அலுவலக வங்கி கணக்கில் கனரா வங்கி போடியில் காசாளர் செலுத்திவிடுவதாகவும், இதுபோல் வழக்கமாகதான் பணியாளர்கள் சொல்வதுபோல் பணம் பெறாமல் ரசீது போட்டுக் கொடுத்து அதன்படி நகராட்சி அலுவலக வரிவசூல் டார்கெட்டை உயர்த்துவதற்காக இவ்வாறு செய்வதாகவும் தெரிவித்தார். இதன்விவரம் குறித்து விசாரிக்கையில் அருகிலிருந்த பணியாளர் திருமதி.கவிதா, ஆணையர், திருமதி.வாசுகி, உதவி வருவாய்

அலுவலர்/பொறுப்பு நிர்வாக அலுவலர் ஆகியோரும் இது குறித்துதங்களுக்கு தெரியாது என்றும் இவ்வாறு செய்வது நகராட்சி அலுவலக விதிமீறல் என்றும் தெரிவித்தனர். எனவே மேற்கண்ட வரிவசூல் செய்யப்பட்ட பணம் இன்றைய தேதியில் காசாளர் திருமதி.சண்டிபிரியா பணிபுரிந்த கணினியில் இருந்து Remittance/Application Register விவரம் வரிசைஎண். 1 முதல் 167 (ரூ.2,43,893/-), Remittance/Application Register விவரம் வரிசைஎண் 1 முதல் 75 (ரூ.126795/-), கணினியில் இருந்து பிரிண்டு எடுக்கப்பட்டும், மேற்குறிப்பிட்ட வரிவசூல் செய்ததான ரசீதுகள் Service Request/Receipt (167 + 75) மொத்தம் 242 ரசீதுகள் 2 கவுண்டர்களில் இருந்ததை விசாரணைக்காக ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. தரைத்தளத்தில் உள்ள காசாளர் அறைஎண்.102 மற்றும் இரும்புலாக்கர், கணக்கர் அறைஎண்.108 சோதனை செய்யப்பட்டதில் ஆவணங்கள், பதிவேடுகள், பைல் தவிர வேறு ஏதும் இல்லை.ஆணையர் அறைக்கு எதிரே உள்ள அறைஎண்.110 பார்வையாளர் காத்திருப்பு அறையை சோதனை செய்ததில் பழைய ஆவணங்கள், டீ டம்ளர்கள் தவிர வேறு ஏதும் இல்லை. இந்த அறையை தவிர தரை தளத்தில் உள்ள மற்ற அறைகளில் சிசிடிவி கேமரா உள்ளது. மேலும் ஆணையர் அவர்களிடமிருந்து இன்றைய தேதிக்கான பொதுப்பிரிவு வருகைபதிவேடு, வருவாய்பிரிவு வருகை பதிவேடு, பொது சுகாதாரபிரிவு வருகைபதிவேடு, பொறியியல்பிரிவு வருகை பதிவேடு, பொறியியல் பிரிவு வருகைபதிவேடு (தொழில்நுட்பம்), காலதாமத வருகைபதிவேடு, பார்வையாளர் வருகைபதிவேடு, தனிநபர் ரொக்கபதிவேடு, பொறியியல்பிரிவு காலதாமத வருகைபதிவேடு, பொதுசுகாதாரபிரிவு காலதாமத வருகைபதிவேடு, இயக்கபதிவேடு ஆகியவற்றின் நகல் விசாரணைக்காக ஆணையரிடம் சான்றொப்பம் பெற்றுபெறப்பட்டது. அலுவலகத்தில் நிரந்தர முன்பணம் இல்லை என்றும், கொடிவசூல் பணம் இல்லை என்றும் ஆணையர் மற்றும் பொறுப்பு நிர்வாக அலுவலரால் தெரிவிக்கப்பட்டது. தரைதளத்தில் யுபிஎஸ் அறைக்கு எதிர்புறம் லிப்ட் அமைந்துள்ளது. தென் வடலாக நீண்ட வராண்டா இருபுற அறைகளுக்கும் நடுவே உள்ளது. முதல் தளத்தில் தரைத்தளத்திலிருந்த படிக்கட்டுகளில் ஏறிசென்றபோது படிக்கட்டு ஏறியவுடன் இடதுபுறம் லிப்ட்டும் அதனையடுத்து இரண்டாம்தளம் செல்வதற்கான படிக்கட்டுகளும் உள்ளது. முதல் தளத்தில் படிக்கு எதிர்புறம் 26 x 21 என்ற அளவில் உள்ள (206) பொறியியல் பிரிவு அறையில் வரைவாளர் அமுதா, ஈ1 இளநிலை உதவியாளர் மணிமேகலா, ஈ2 பில்கலெக்டர் கருப்பசாமி, 4 பணி ஆய்வர் பவானி, ரஞ்சிதா, மணிகண்டன், சர்வித் கிருஷ்ணா ஆகியோர் இருக்கைகள் மேஸை டிரா, மரசெல்ப்கள், ஸ்டீல் பீரோ, 2 மரபீரோக்கள் கணினிகள், ஜெராக்ஸ் மிசின் உடன் உள்ளதையும், பணியாளர்கள் கைப்பைகளையும் சோதனை செய்ததில் கைப்பற்றக் கூடிய ஆவணங்கள் ஏதும் இல்லை. 4 பணி ஆய்வர்கள் கள ஆய்விற்கு மதிய உணவிற்கு பின் சென்று விட்டதாக வரைவாளர் அமுதா அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அறைஎண்.204 உதவிப்பொறியாளர் அறையில் திருமதி.வனிதை,

உதவிபொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர் கார்த்திகேயன் இருக்கைகளும், ஆவணவைப்பு செல்ப்களும், ஒரு ஸ்டோர்ரூம், 2 ஸ்டீல் பீரோ, கழிவறை சோதனை செய்யப்பட்டதில் அலுவலக ஆவணங்கள், பைல்கள் தவிர ஏதும் இல்லை. இதனையடுத்து பெண்,ஆண் கழிவறைகள் உள்ளது. அறைஎண்.205 நகராட்சி பொறியாளர் திரு.குணசேகரன் அறையை சோதனையிட்டதில் அவர் தேனியில் மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தில் மீட்டிங் முடித்து, தேனி நகராட்சி அலுவலகத்திற்கு பொறுப்பு அலுவலர் என்பதால் சென்று விட்டதாக தகவல் தெரிவித்தனர். இந்த அறையில் உள்ள இருக்கைகளும், ஆவண வைப்பு செல்ப்களும், டைனிங் ரூம், ஸ்டீல் பீரோ, கழிவறை சோதனை செய்யப்பட்டதில் அலுவலக ஆவணங்கள், பைல்கள் தவிர ஏதும் இல்லை. அறைஎண்.207 வருவாய் பிரிவு அறையில் பில்கலெக்டர் கருப்பசாமி, ராமச்சந்திரன், ஆனந்தகுமார், விஜய், வருவாய் ஆய்வாளர் காஜா ஆஜரில் இருந்தனர். பில்கலெக்டர் கேசவன், பெரியமருது, பிரேம் குமார், அன்வருதீன், ஆர்ஐ ராஜ்கபூர் மதியம் வரி வசூலுக்கு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. அறைஎண்.203 பொது சுகாதார பிரிவு சோதனை செய்ததில் துப்புரவு அலுவலர் அரசகுமார், அனிமேட்டர் சூப்பர் வைசர் பிரசாந்த, எச்1 இளநிலை உதவியாளர் தேவி, டைப்பிஸ்ட் பிரியா, நிஷா ஆகியோர் ஆஜரில் இருந்தனர். துப்புரவு ஆய்வாளர் திருப்பதி, சரவணன், லெனின் ஆகியோர் களப்பணிக்கு மதிய உணவிற்கு பின் சென்றுவிட்டதாகஅறியப்பட்டது. அறைஎண்.202 உதவி வருவாய் அலுவலர் திருமதி.வாசுகி இருக்கையுடன் கூடிய அலுவலகம் சோதனை செய்யப்பட்டது. இதனுடன் அறைஎண்.201 சுகாதார அலுவலர் திரு.அரசகுமார் அவர்களின் அலுவலகம், பிறப்பு,இறப்பு பதிவேடுகள் இருந்த செல்ப்கள், இருக்கைகள் சோதனையிடப்பட்டது. அறைஎண்.208 நகரமைப்புபிரிவு அறையில் டவுண் பிளானிங் இன்ஸ்பெக்டர் சுகதேவ், சென்செஸ் கிளர்க் ராஜா, டைப்பிஸ்ட் பிரதாப், உதவியாளர் மணிகண்டபிரபு ஆகியோரின் இருக்கைகள் மற்றும் உடைமைகள் சோதனையிடப்பட்டது. மேலும் அறைஎண்.209 நகரளவர் எஸ்.ரியாசுதீன் என்பவரின் இருக்கைகள் ஆவண காப்பு பீரோக்கள், 6 பெரிய மரப்பெட்டிகள் சோதனையிடப்பட்டது. முதல்தளத்தில் உள்ள மேற்கண்ட அனைத்து அறைகளிலும் சோதனை செய்ததில் கம்யூட்டர்கள், பிரிண்டர், ஜெராக்ஸ் மிஷின், பீரோ செல்ப்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பழைய ஆவணங்கள், பைல்கள் தவிர வேறு ஏதும் காணப்படவில்லை. இரண்டாம் தளத்திற்கு சென்ற போது படிக்கட்டு ஏறியவுடன் வலதுபுறம் லிப்ட் உள்ளது. 20x10 என்ற அளவில் உள்ளஅறைஎண்.303 சிறுகூட்ட அரங்கு அறை, 301 நகர்மன்ற கூடம், (302) பார்வையாளர் அறையை சோதனை செய்ததில் பொருட்கள் ஏதும் இல்லை. (305) தேர்தல் பிரிவுஅறை, (308) நகர்மன்றதலைவர் அறை, அறைஎண்.307 காத்திருப்போர் அறை, (304) தணிக்கைஅறை, (306) பதிவறைபூட்டப்பட்டிருந்தது. இதன் சாவி அலுவலகத்தில் இல்லை என்பதால் சோதனை செய்யப்படவில்லை. மூன்றாவது தளம் மொட்டைமாடியாக உள்ளது. நகராட்சி கட்டிடத்தின் வெளியே காம்பவுண்ட்க்கு

உள்பகுதியில் வடக்குபக்கம் பழைய குடோன் ஒன்றும், அதனருகே வடகிழக்கு மூலையில் தரைதளத்தில் உணவு பாதுகாப்பு அலுவலகம், போடிநாயக்கனூர் அலுவலகமும். அதனருகிலேயே அனிமேட்டர் பணியாளர் அலுவலகமும், அதன் மேலே EVM Strong Room-ம் போலீஸ் ஹார்டுடன் உள்ளது. நகராட்சி அலுவலகத்தின் பின்புறம் கிழக்குபக்கம் ஆதார் மையமும் உள்ளது. மேற்கண்ட அலுவலக பணியாளர்கள், பொதுமக்கள் சோதனைக்குபின் உடனுக்குடன் நன்முறையில் அனுப்பப்பட்டனர். இவ்வலுவலகத்தில் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராதபணம் ரூ.91,000/- மற்றும் வரிவசூல் கணக்கில் குறைவாக உள்ள பணம் மற்றும் தொடர்புடைய பணியாளர்கள் குறித்து ஆணையர் அவர்களிடம் விளக்கம் கேட்கையில் தான் இன்று காலையில் தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் மீட்டிங்கில் கலந்து கொண்டு மதிய உணவுக்கு பின் சுமார் 3 மணிக்கு மேல் அலுவலகம் வந்ததாகவும் தனக்கு இந்த விவரம் பற்றி தெரியாது என்றும், ஆனால் மேற்கண்டவாறு கணக்கில் வராத பணத்தை எக்காரணம் கொண்டும் வரிவசூல் மையம் மற்றும் அலுவலக இருப்பில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று காசாளர் உட்பட அனைவருக்கும் தான் துறை ரீதியான உத்தரவு, வழிகாட்டுதல்களை சுட்டிக்காட்டி அறிவுரை கொடுத்துள்ளதாகவும் அதனை மீறி விதிமீறல்கள் நடந்துள்ளதாகவும் ஆணையர் மற்றும் திருமதி.வாசுகி, நிர்வாக பொறுப்பு அலுவலர் அவர்களும் தெரிவித்தனர். அலுவலக போர்ட்டிகோவில் ஆணையர் வாகனமும் (Green Bolero TN60 Q 5418, White Bolero TN60 V 1693), நகராட்சி சேர்மன் (White Scorpio TN60 BY 1217) நிறுத்தப்பட்டுள்ளது. ஆணையர் வாகன ஓட்டுநர் மாரிமுத்து, அலுவலக தனி உதவியாளர் ராமகிருஷ்ணன் ஆஜரில் உள்ளனர். மேலும் இச்சோதனையின் போது அலுவலகத்தில் இருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் இச்சோதனையின் போது இருந்த அலுவலக அலுவலர்கள் நன்முறையில் நடத்தப்பட்டனர். திடீர் கூட்டாய்வு விவரங்கள் செயல்முறை ஆணையாக கணினியில் பதிவுசெய்யப்பட்டு 04.07.2026ம் தேதி காலை சுமார் 03.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தில் வரிவசூல் மையத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.91,000/-, (182x500), திடீர் கூட்டு ஆய்வின் போது ஆஜரில் இருந்த நபர்களிடம் பெறப்பட்ட எழுத்து மூலமான கடிதம் மொத்தம் 44, ஆய்வு குறிப்பில் கண்ட விசாரணைக்கான கைப்பற்றப்பட்ட 14 ஆவணங்களின் நகராட்சி ஆணையாளர் சான்றொப்பம் இட்ட நகல்கள், திரு.விஜய் என்பவரின் G Pay-பண பரிவர்த்தனை விவரம் 11 தாள்கள் ஆகியவைகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி சோதனையில் கைபற்றப்பட்ட கணக்கில் வராத லஞ்ச பணம் ரூ.91,000/- தொடர்பாக அதற்கான பொறுப்பு அலுவலர்களான போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் திரு.S முஸ்தபா, நகராட்சி ஆணையாளர், திரு.மு.விஜய், அ2-கிளார்க்/இளநிலை உதவியாளர், செல்வி.த. காமாட்சிகௌசி, இளநிலை உதவியாளர்/காசாளர், திருமதி.C.வாசுகி, உதவி வருவாய்

அலுலவர் மற்றும் நிர்வாக அலுவலர் பொறுப்பு, நகராட்சி அலுவலகம், போடிநாயக்கனூர்ர் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (இரா.ஸ்ரீதரபாண்டியன்), ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை நாள்: 04.07.2026.

Sir, Received the complaint today on 04.07.2026 at 16.30 hrs along with joint surprise check proceedings, dt : 04.07.2026, Statements letters, Sezied documents. cash Rs,91,000/-. After obtaining permission from the Superior officers, registered a case in Theni V&AC, Cr.No. 02/2026, U/s 7(a) of The Prevention of Corruption Act 1988, as amended in 2018 on 04.07.2026 at 17.00 hrs.

Original FIR along with the complaint of Tr.R.Sritharapandiyan, Inspection Cell Inspector, O/o the Inspection Cell Officer, Madurai and the joint Surprise check proceedings dt: 04.07.2026 are submitted to the Hon'ble Principle District Sessions Judge, Theni and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

T.R.
04.07.2026.

T.Rameswari,
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Theni District.